[7th December 1961

SRI M. S. SELVARAJAN : ஹைஸ்கூல்களிலும் ஆரம்பப்பாட சாலைகளிலும் வகுப்பில் ஆங்கிலம் போதிக்கப்படுவதுபோல் ஹயர் எலிமென்டரி ஸ்கூல்களில் 5-வது வகுப்பில் ஆங்கிலம் போதிக்கப் படவில்லையா ? அப்படி போதிக்கிற செகண்டரி கிரேட் ஆசிரியர் களுக்கு ஹையர்கிரேட் ஆசிரியர் சம்பளம் கொடுக்காமல் மற்ற செகண்டரி கிரேட் ஆசிரியர்களை ஒப்ப, கொடுக்கவேண்டியது நியாயம் இல்லையா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : நியாய அநியாயம் இதில் ஒன்றும் கிடையாது. ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் எவ்வளவு செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் இருக்கலாம் என்று உள்ளது. அதற்கு மேல் அதிகமாக செகண்டரி கிரேட் ஆசிரியர்கள் இருந் தால் அவர்கள் ஹையர் கிரேட் ஆசிரியர் போஸ்டில்தான் காட்டப் படுகிறார்கள். ஆகவே இவர்கள் ஹையர் கிரேட் ஆசிரியர் சம்பளம் பெறுகிறார்கள். அப்படியின்றி எல்லோருக்கும் ஒரே கிரேட் கொடுக்கவேண்டுமென்று சர்க்கார் நினைத்தாலும் அப்படிச் செய்வதற்கு கல்வி பட்ஜெட் போதாது.

SRI J. MATHA GOWDER : ஐந்தாவது வகுப்புக்கு மேலே யுள்ள வகுப்புகளுக்கு செகண்டரி கிரேட் ஆசிரியர்களைத்தான் நியமிக்கவேண்டும் என்று இருக்கிறது. இப்போது ஐந்தாவது வகுப்பிலேயே ஆங்கிலம் கற்றுத்தர ஆரம்பித்திருப்பதால் ஐந் தாவது வகுப்புக்கும் செகண்டரி கிரேட் ஆசிரியரையே நியமிக்க வேண்டியிருக்கிறது. ஆகவே இப்படி வேலை செய்கிற செகண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கும், உரிய சம்பளத்தைக் கொடுத்தால்தான் மனதில் சந்தோஷத்தோடு வேலை செய்வார்கள். அப்படிச் செய்ய முன்வருவார்களா என்று அறியவிரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்போது ஐந்தாவது வகுப்புவரையில் இருக்கிற பள்ளிக்கூடத்தில்கூட ஒருசெகண்டரி கிரேட் டீச்சராவது இருக்கவேண்டுமென்று உத்தரவு போடப்பட் டிருக்கிறது. அவர்களுக்கு செகண்டரி கிரேட் சம்பளமே கொடுக் கப்படுகிறது.

Madurai District Board Teachers (Salaries)

* 2142 Q.—SRI N. R. THIAGARAJAN : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை ஜில்லா போர்டு ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுப்பது காலதாமதமாகக் காரணம் என்ன ?

(இ) பிரதி மாதம் 1 முதல் 5 தேதிக்குள் சம்பளம் கொடுக் கும்படி உத்திரவிடுவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) There was no delay in the payment of salaries to the District Board High School teachers. There was some delay in paying salaries to a few elementary school teachers during the months from August 1960 to July

7th December 1961]

1961, due to (1) the non-receipt of bills in time from those teachers and (2) receipt of defective bills which had to be returned for rectification of defects.

(இ) The District Boards have been abolished on 2nd October 1961. Instructions have been issued to the successor bodies, the Panchayat Union Councils, to pay salaries to teachers on the first working day of each month.

Sengal Odai Scheme

* 2143 *Q.*—SRI K. R. VISWANATHAN: Will the Hon. the Minister for Home be pleased to state when it is proposed to take up the execution of the Sengal Odai Scheme in Udayarpalayam taluk, Andimadam firka, sanctioned as early as in 1959?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: A revised estimate amounting to Rs. 79,000 for the Sengal Odai Scheme in Udayarpalayam taluk in Tiruchirappalli district has been sanctioned in July 1961. The work will be taken up for execution early after calling for and settlement of tenders by the Superintending Engineer, Tiruchirappalli Circle.

Village officers

*** 2144 *Q.*—SRI K. ANBAZHAGAN:** கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கம், அம்பாசமுத்திரம் வட்ட மாநாட்டில் 1960-ம் ௵ ஜூலை ௴ 28௳ நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அமைச்சருக்குக் கிடைத்தனவா:

(இ) வைத்தியச் சலுகை, குழந்தைகட்கு கல்விச் சலுகை ஆகியவை அவர்கட்கு முழு அளவில் கிடைக்கச் செய்வது பற்றி அரசாங்கம் எடுத்த முடிவு யாது?

(உ) கிராம உத்தியோகத்தினரது வேலை பளு மிகவும் பெருகி வந்துள்ளதால் அதைக் குறைப்பதுபற்றி அரசாங்கத்தின் கருத்து யாது?

THE HON. SRI M. A. MANICKAVELU: (அ) **No, Sir.**

(இ) The village officers and servants have been given the same concessions as those given to the N. G. G. Os. The children of village officers are now given full fee remission for Forms I to III, and for Forms IV to VI half-fee concession if the total income of the parent exceeds Rs. 100 per mensem and full fee concession in other cases. The children of village servants are eligible for full fee remission for Forms I to VI.

(உ) The Government have not yet arrived at any decision in the matter.

SRI K. ANBAZHAGAN: தலைவர் அவர்களே, கிராம உத்தியோகத்தில் இருப்பவர்களுடைய மாத வருமானம் 100 ரூபாய்க்கு மேல் இருந்தால் சலுகை கிடையாது என்றும், இல்லாதவர்கள்